SFM

12 - ஆம் வகுப்பு

காலம் : 1.30 மணி

# முதல் இடைப் பருவத் தேர்வு – 2024

## பொதுத்தமிழ்

மதிப்பெண்கள் : 50

### பகுதி – அ

I கொடுக்கப்பட்டுள்ள தெரிவுகளுள் சரியான தெரிவை அதற்கான குறியீட்டுடன் எழுதுக.

10 X 1 = 10

1. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய தமிழ் பிராம்மி எழுத்துகள் பொறிக்கப்பட்ட பாறை அமைந்துள்ள இடம்

அ) சின்னமனூர் ஆ) மாங்குளம் இ) திண்டுக்கல் ஈ) வத்தலகுண்டு

2. அணியிலக்கணத்தை மட்டும் கூறும் இலக்கணநூல்

அ) தொல்காப்பியம் ஆ) வீரசோழியம் இ) முத்துவீரியம் ஈ) தண்டியலங்காரம்

3. 1879 இல் வம்சமணி தீபிகை என்னும் நூலை எழுதி வெளியிட்டவர்

அ) பாரதியார் ஆ) நெல்லையப்பர்

இ) கவிகேசரிசாமி தீட்சிதர் ஈ) ரா.அ. பத்மநாபன்

4. பொருத்துக.

அ) தமிழ் அழகியல் – 1) பரலி சு. நெல்லையப்பர்

ஆ) நிலவுப்பூ – 2) தி.சு. நடராசன்

இ) கிடை – 3) சிற்பி பாலசுப்பிரமணியம்

ஈ) உய்யும் வழி – 4) கி. ராஜநாராயணன்

அ) 4,3,2,1 ஆ) 1,4,2,3 இ) 2,4,1,3 ஈ) 2,3,4,1

5. உலகப் புவி நாள்

அ) ஏப்ரல் 22 ஆ) மார்ச் 20 இ) ஜூலை 5 ஈ) ஜூன் 22

6. கீழ்க்கண்டவற்றுள் பொருந்தா ஒன்றைத் தேர்க

அ) இன்று ஆ) மழைக்குப் பிறகும் மழை

இ) நானென்பது வேறொருவன் ஈ) நீர்வெளி

7. யார்? எது? ஆகிய வினாச்சொற்கள் பயனிலையாய் அமைந்து, உணர்த்தும் திணைகள் முறையே

அ) அஃறிணை, உயர்திணை ஆ) உயர்திணை, அஃறிணை

இ) விரவுத்திணை, அஃறிணை ஈ) விரவுத்திணை, உயர்திணை

8. "நும்மனைச் சிலம்பு கழீஇ அயரினும்
எம்மனை வதுவை நல்மணம் கழி" – இப்பாடலடிகள் இடம்பெறும் நூல்

அ) கலித்தொகை ஆ) அகநானூறு இ) ஐங்குறுநூறு ஈ) குறுந்தொகை

9. இவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்பாயாக என்று ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது

அ) வக்கிரம் ஆ) அவமானம் இ) வஞ்சனை ஈ) இவை அனைத்தும்

10. எட்டு சுவடியிலிருந்து திருக்குறள் முதன்முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு

அ) 1712 ஆ) 1812 இ) 1822 ஈ) 1834



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## பகுதி - ஆ பிரிவு - I

**எவையேனும் மூன்றனுக்கு விடையளிக்க.** 3 X 2 = 6

11. விடியல், வனப்பு - இருசொற்களையும் இணைத்துத் தொடரமைக்க.
12. 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' - விளக்கம் தருக.
13. நிலையாமை குறித்துச் சவரி உரைக்கும் கருத்து யாது?
14. சினத்தை ஏன் காக்க வேண்டும்?

## பிரிவு - II

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.** 5 X 2 = 10

15. உறுப்பிலக்கணம் தருக. அ) வியந்து.
16. உவமைத் தொடர்களைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக.
 அ) அச்சாணி இல்லாத தேர்போல. ஆ) தாமரை இலை நீர்போல
17. தமிழாக்கம் தருக.
 அ) Green Belt Movement ஆ) Social forestry schemes
18. திருவளர்ச்செல்வன், திருவளர் செல்வன் - இவற்றில் சரியான தொடர் எது? அதற்கான இலக்கண விதி யாது?
19. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
 அ) நம் வாழ்க்கையின் தரம் நமது கவனத்தின் தரத்தை பொறுத்திருக்கிறது. புத்தகம் படிக்கும்பொழுது கூர்ந்தக் கவனம் அறிவை பெறுவதற்கும் வளர்ப்பதற்குமான அடிப்படை தேவையாகும்.
20. பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாக ஆக்குக.
 அ) மாறன் பேச்சுத்திறன் யார் வெல்ல முடியம்.
 ஆ) காலை எழுந்து படித்து நமக்கு நன்மை ஏற்படும்.

## பகுதி - இ

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக.** 3 X 4 = 12

21. 'ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
22. மழைவெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.
23. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக் குடும்பம் - விளக்கம் தருக.
24. சடாயுவைத் தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமையை எழுதுக.
25. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
 பண்பும் பயனும் அது - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

## பகுதி - ஈ

**விரிவான விடை தருக.** 1 X 6 = 6

26. அ) பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்துகொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க. ***(அல்லது)***
 ஆ) உரிமைத்தாகம் கதையில் சகோதரர்கள் ஒன்றிணையாமல் இருந்திருந்தால் ........ கதையைத் தொடர்ந்து எழுதி முடிக்க.
27. **அடிபிறழாமல் எழுதுக.** 4 + 2 = 6
 அ) 'துன்பு உளது' எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடல்.
 ஆ) "படும்" என முடியும் குறட்பா.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com